# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 08 | பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :.......................................................................................................

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. ஈதல் என்பது மனிதர்களிடம் இருக்க வேண்டிய சிறந்த நற்பழக்கமாகும். இங்கு ஈதல் என்பதன் ஒத்தபதம்.
    1. ஏற்றல் 2. கொடுத்தல் 3. கெடுத்தல் 4. ஏவுதல்

02. விமானத்தின் முன் அறையில் நவீனமான பொறிகள் இருந்தன. இங்கு நவீனம் என்பதன் எதிர்ப்பதம்.
    1. புராதனம் 2. புதுமை 3. அசைவு 4. இயக்கு

03. நோயாளி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவ்வாக்கியத்தில் நோயாளி என்பது.
    1. ஆண்பால் 2. பெண்பால் 3. பலர்பால் 4. பலவின்பால்

04. க், ச், ட், த், ப், ற் என்பது எவ்வகை மெய்யெழுத்துக்கள்.
    1. வல்லினம் 2. மெல்லினம் 3. இடையினம் 4. உயிர் எழுத்து

05. உயிர் மெய் குற்றெழுத்துக்களின் எண்ணிக்கை.
    1. 18 2. 12 3. 90 4. 126

06. பறவைகள் வானில் அழகாகப் பறந்தன. இங்கு பறவைகள் என்பது.
    1. இருகுறிப்பெயர் 2. காரணப்பெயர்
    3. காரண இருகுறிப்பெயர் 4. மாற்றுப்பெயர்

07. பாம்பிடமிருந்து தேரை தப்பிச் சென்றது. இவ்வாக்கியத்தின் எழுவாய்
    1. பாம்பு 2. தேரை 3. தப்பி 4. சென்றது

08. விளையாட்டு விழாவினைக் கான மக்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். இதில் வினையடையாக வந்துள்ள சொல்.
    1. விளையாட்டு விழா 2. மக்கள் 3. ஏராளமாக 4. வந்திருந்தார்கள்

09. பின்வரும் சொற்களில் சினைப்பெயராக அமைவது.
    1. மரம் 2. வேர் 3. பாடசாலை 4. ஓடுதல்

10. Compas எனும் கலைச்சொல்லின் தமிழ் வடிவம்.
    1. தானியங்கி 2. திசையறிகருவி 3. தொலைநோக்கி 4. நுணுக்குக்காட்டி


kalvi.lk

**11.** பனையின் இளங்காய் நுங்கு எனப்படுவது போல பலாவின் இளங்காய்.

1. குரும்பை 2. வடு 3. கச்சல் 4. மூசு

**12.** பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமையாதது.

1. மயிலிறகு 2. கடலலை 3. நீரருவி 4. பெண்ணழகு

**13.** கட்டுரையின் அமைப்பில் இடம்பெறாதது.

1. முகவுரை 2. தொடருரை 3. விளிப்பு 4. முடிவுரை

**14.** நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடு இருக்கிறது. இவ்வாக்கியத்தில் நல்ல நல்ல என்பது.

1. இரட்டைமொழி 2. இணைமொழி 3. அடுக்குத்தொடர் 4. அடுக்கிடுக்குத்தொடர்

**15.** தக்க சந்தர்ப்பம் வரும்போது தவறவிடக்கூடாது. என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி.

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. 2. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.
3. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. 4. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.

**16.** நான் சாவியால் கதவைத் திறந்தேன். இவ்வாக்கியத்தில் ஆல் உருபு ஏற்றுள்ள பொருள்.

1. கருவிப் பொருள் 3. காரணப் பொருள்
2. கருத்தாப் பொருள் 4. உடனிகழ்ச்சிப் பொருள்

**17.** நோ, காற்று, பாதை என்னும் பொருளை முறையே குறிக்கும் சொற்தொகுதி.

1. வளி, வலி, வழி 3. வலி, வழி, வளி
2. வழி, வளி, வலி 4. வலி, வளி, வழி

**18.** சுவை, ஒளி, உறு, ஓசை. நாற்றம் என்பன.

1. ஐம்பொறிகள் 2. ஐம்பூதங்கள் 3. ஐம்புலன்கள் 4. ஐந்நிலங்கள்

**19.** வீட்டின் முன்னால் கோயில் இருக்கிறது. இவ்வாக்கியத்தில் இன் உருபு உணர்த்தும் பொருள்.

1. எல்லை 2. ஏது 3. ஆக்கல் 4. அழித்தல்

**20.** இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

1. வைரவிழா 2. பொன்விழா 3. வெள்ளிவிழா 4. அமுதவிழா

($20 \times 1\frac{1}{2} = 30$ புள்ளிகள்)

## பகுதி II

**(01)** பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

01. நல்ல புத்தகங்கள் நல்ல நண்பர்கள்
02. நான் ஒரு பறவையானால்
03. விஞ்ஞானமும் மனிதனும்
04. கடற்கரைக் காட்சி

(18 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

**(02)** நல்ல நூல்களை வாசிப்பதால் வாழ்வில ஏற்படும் நன்மைகள் பற்றி, விளக்கும் வகையில் உமது நண்பனுக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக. *(12 புள்ளிகள்)*

**(03)** பின்வரும் சொற்களின் பொருள் புலப்படும் வகையில் வாக்கியம் எழுதுக.

| | | |
|---|---|---|
| *01.* வலை, வளை | *03.* வாலை, வாழை | *05.* தன்மை, தண்மை |
| *02.* வரை, வறை | *04.* பானம், பாணம் | *06.* மரம், மாரம் |

*(6 × 2 = 12 புள்ளிகள்)*

**(04)** பின்வரும் வினாக்களுக்கு பாடநூலை ஆதாரமாகக் கொண்டு விடை எழுதுக.

*01.* வியாபாரி கோபம் கொண்டமைக்கான காரணம் யாது?
*02.* கூண்டிற்கிளி என்னும் பாடப்பகுதியில் கவிதையின் ஆசிரியர் கூறவிளைந்த விடயம் யாது?
*03.* தசரத மன்னனின் புதல்வர்கள் யாவர்?
*04.* பறைவகளின் இசைவாக்கம் எனும் பாடப்பகுதியில் வரும் ஏழைப்புலவர் யார்? நாரைகள் அவரின் வீட்டை எவ்வாறு அடையாளம் காண்பதாகக் கூறப்பட்டுள்ளது.
*05.* இராபர்ட் புரூஸ் உயிரைக் காப்பதற்காக மறைந்து வாழ்ந்த இடங்கள் எவை?
*06.* வாழ்வதற்காக வாசி என்னும் பாடப்பகுதியில் டால்ஸ்டாய் எழுதிய நாவலின் பெயர் என்ன?

*(6 × 3 = 18 புள்ளிகள்)*

**(05)** பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

'கான்ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒருதம்பி ; போனவன் தான்
வரும் அவதி போயிற்று என்னா,
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒருதம்பி ; அயலே நாணாது,
யானாம் இவ் அரசு – ஆள்வென்? என்னே, இவ்
அரசாட்சி! இனிதே அம்மா !'

*01.* இப்பாடல் இடம்பெறும் காப்பியம் எது?
*02.* கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப் போனவன் யார்?
*03.* வரும் அவதி போயிற்று என்னா ஆனாத உயிர்விட என்று அமைவான் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
*04.* இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தற்குறிகள் நான்கினை குறியீட்டுடன் குறிப்பிடுக.
*05.* பின்வரும் சொற்களின் பொருளை எழுதுக.

1. கான் -
2. அவதி -
3. நாணம் -
4. நிலமகள் -

*(5 × 2 = 10 புள்ளிகள்)*


kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page